**செய்தி வெளியீடு எண்:03** **நாள்: 03.01.2013**

**செய்தி வெளியீடு**

நாட்டின் தொழில் வளர்ச்சியிலும், பொருளாதார மேம்பாட்டிலும், தொழிலாளர்களின் பங்கு மிக முக்கியத்துவம் வாய்ந்தது. இதனைக் கருத்தில் கொண்டு, தொழிலாளர்களுக்கான பல சமூகப் பாதுகாப்பு திட்டங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி சட்டத்தின் கீழ், தொழிலாளர் அரசு காப்பீட்டுத் திட்டம் என்ற ஒருங்கிணைந்த சமுதாய பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், தொழிலாளர்கள் மற்றும் அவர் தம் குடும்பத்தினருக்கு மருத்துவ வசதி, உடல் நலமின்மை உதவி, பேறுகால உதவி, உடல்நலமின்மைக்கான நீட்டித்த உதவி, சார்ந்துள்ளோர் நல உதவி, தற்காலிக இயலாமையுற்றோருக்கான உதவி, நிரந்தர இயலாமையுற்றோருக்கான உதவி, கருத்தடை அறுவை சிகிச்சைக்கான உதவி, இறுதிச் சடங்குக்குரிய உதவி, வேலை இழந்தோருக்கான உதவி மற்றும் ஊன்றுகோல், சக்கர நாற்காலி, பல்செட், மூக்கு கண்ணாடி வழங்குதல் போன்ற பல சமூக பாதுகாப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அமைப்பு சார்ந்த நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும், அவர்தம் குடும்பத்தினருக்கும் மருத்துவ வசதிகள் வழங்கும் வகையில் தமிழ்நாட்டில் தொழிலாளர்களுக்கென 2,363 படுக்கைகள் கொண்ட 191 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் மற்றும் 9 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் செயல்பட்டு வருகின்றன.

மாவட்டங்கள் தோறும், பெருகி வரும் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு, கன்னியாகுமரி மாவட்டம் தக்கலைப் பகுதியில் மூன்று மருத்துவர் கொண்ட மருந்தகம் ஒன்றும், மணவாளக்குறிச்சியில் இரண்டு மருத்துவர் வகை கொண்ட மருந்தகம் ஒன்றும், காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், படப்பைப் பகுதியில் இரண்டு மருத்துவர் வகை கொண்ட மருந்தகம் ஒன்றும் தொடங்குவதற்கு சென்ற ஆண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டார்கள்.

தற்பொழுது, தமிழகம் முழுவதும் பெருகிவரும் தொழில் நிறுவனங்களால், தொழிலாளர்கள் எண்ணிக்கை அதிக அளவில் உயர்ந்துள்ளது. இவர்களுக்கும், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அனைத்து மருத்துவ வசதிகளையும் விரிவுப்படுத்தும் வகையில், தொழிற்சாலைகள் இயங்கும் பகுதிகளை, அப்பகுதிகளுக்கு அருகில் தற்பொழுது இயங்கி வரும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களுடன் இணைப்பதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அதன்படி, திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை தாலுக்காவிலுள்ள, பொன்னக்குடி பகுதியை, வண்ணாரப்பேட்டை, தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்துடனும், கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் நகர்புற பகுதியை, நாகர்கோவில், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்துடனும், மதுரை மாவட்டம், மதுரை வடக்கு மற்றும் வாடிப்பட்டி தாலுக்காவிலுள்ள பரவை நகர்புற பகுதியை, தல்லாகுளம் மற்றும் பரவையிலுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்துகத்துடனும், விருதுநகர் மாவட்டம், சாத்தூர் தாலுக்காவிலுள்ள சின்னக்காமன்பட்டி பகுதியை, சாத்தூர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்துடனும், மதுரை மாவட்டம், மதுரை நகர்புற பகுதியை பரவை தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்துடனும், காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள செங்கல்பட்டு புறநகர் பகுதியை செங்கல்பட்டு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்துடனும், கரூர் மாவட்டம், கரூர் தாலுக்காவிலுள்ள ஆத்தூர் பகுதியை, கரூர் மற்றும் புலியூர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்துடனும், மதுரை மாவட்டம், மதுரை வடக்கு தாலுக்காவிலுள்ள, வல்லக்குண்டு பகுதியை முனிச்சாலை தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்துடனும், காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தாலுக்காவிலுள்ள சிறுசேரி பகுதியை, கேளம்பாக்கம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்துடனும். விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் தாலுக்காவிலுள்ள சேத்தூர் பகுதியை ராஜபாளையம், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்துடனும், கோயம்புத்தூர் மாவட்டம், பன்னிமடை மற்றும் சின்னத்தடாகம் பகுதிகளை துடியலூர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்துடனும், திருவள்ளுவர் மாவட்டம், பொன்னேரி தாலுக்காவிலுள்ள மணலிப் புறநகர் பகுதியை மணலி தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்துடனும், ஈரோடு மாவட்டம், கோபிச்செட்டிப்பாளையம் புறநகர் பகுதி, கோபி செட்டிப்பாளையம், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்துடனும், காஞ்சிபுரம் மாவட்டம் சோழிங்கநல்லூர் தாலுக்காவிலுள்ள வேங்கைவாசல் பகுதியை தாம்பரம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்துடனும், விருதுநகர் மாவட்டம், சாத்தூர் தாலுக்காவிலுள்ள நல்லி மற்றும் ஏழாயிராம்பண்ணை பகுதிகளை சாத்தூர் மற்றும் தாயில்பட்டி, தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களுடனும், விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுக்காவிலுள்ள ஸ்ரீவில்லிபுத்தூர் புறநகர் பகுதியை, ஸ்ரீவில்லிபுத்தூர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்துடனும், விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர், சிவகாசி தாலுக்காக்களில் உள்ள விருதுநகர் பகுதிகள், ராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர், ஆமத்தூர், சிவகாசி மற்றும் ஆலங்குளம் பகுதிகளிலுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களுடனும், சேலம் மாவட்டம், சேலம் மற்றும் வாழப்பாடி தாலுக்காக்களிலுள்ள வீராணம், வலசையூர், குள்ளம்பட்டி, மின்னம்பள்ளி பகுதிகளை, அம்மாபேட்டை, தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்துடனும், மதுரை மாவட்டம், மதுரை வடக்கு தாலுக்கா மற்றும் மேலூர் தாலுக்காக்களிலுள்ள மதுரை புறநகர் பகுதிகள் (அழகர்கோவில்) தல்லாகுளம் மற்றும் மேலூர், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களுடன் இணைக்கப்படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதன் மூலம் 37,709 தொழிலாளர்கள் பயன் பெறுவார்கள்.

விருதுநகர் மாவட்டத்தில் பட்டாசு தயாரிக்கும் தொழிற்சாலைகளில் ஏற்படும் விபத்துகளினால் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். எனவே பட்டாசுத் தொழிற்சாலைகளில் விபத்துக்கள் ஏற்படாவண்ணம் சீரிய முறையில் கண்காணிக்கவும், தொழிலாளர்களின் உயிரிழப்பினை தடுக்கும் நோக்கிலும், ஒரு நடமாடும் கண்காணிப்பு

குழு ஒன்றினை ஏற்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இந்த கண்காணிப்புக் குழுவிற்கு தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வாளர் 1, தொழிற்சாலைகள் ஆய்வாளர் 1, தட்டச்சருடன் இணைந்த இளநிலை உதவியாளர் 1, ஓட்டுநர் 1, அலுவலக உதவியாளர் 1, என 5 பணியிடங்களை தோற்றுவிக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இந்தக் குழுவிற்கு தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வாளர் தலைமை வகிப்பார்.

இந்தக் குழு, தொழிற்சாலைகளில் திடீர் ஆய்வு மேற்கொள்ளுதல், பணிபுரியும் இடங்களில் நிலவும் பாதுகாப்பு மற்றும் உடல்நிலை ஆகியவற்றைக் கண்காணித்தல், தொழிலாளர்கள் மற்றும் நிர்வாகத்தினருக்கு போதிய பாதுகாப்புகள் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்துதல், கிராமங்களுக்கு சென்று நாடகம், நடனம், காணொலி காட்சி நடத்தி விழிப்புணர்வினை ஏற்படுத்துதல், பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிற்சாலைகளில் அன்றாடம் ஏற்படும் நிகழ்வுகளை கண்காணித்தல் போன்ற பல்வேறு பணிகளை மேற்கொள்ளும். இதற்காக அரசுக்கு 38 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவினம் ஏற்படும்.

தமிழ்நாட்டில் தற்பொழுது செயல்பட்டு வரும் 62 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில், 58 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இவற்றில் பெரும்பாலான தொழிற்பயிற்சி நிலையங்கள் 40 வருடங்களுக்கு முன்னர் தொடங்கப்பட்டவை. எனவே இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் உபயோகத்தில் உள்ள அறைகலன்கள் பல ஆண்டுகளுக்கு முன்னர் வாங்கப்பட்டதால், அவை பழுதடைந்த நிலையில் உள்ளன. இதனால் அங்கு பயிலும் மாணவ, மாணவியர்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர்.

எனவே, விருதுநகர், தூத்துக்குடி, திருச்செந்தூர், திண்டுக்கல், பரமக்குடி, புதுக்கோட்டை, திருச்சி, நாகப்பட்டினம், கோயம்புத்தூர், ஈரோடு, குன்னூர், கிண்டி, அம்பத்தூர், முதுகுளத்தூர், திருக்குவளை ஆகிய இடங்களிலுள்ள 15 அரசு தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு வகுப்பறை அறைகலன்கள் வாங்குவதற்கு 75 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9.
நாள்:- 3.1.2013.
ழ்